# ஓநாயும் ஏழு ஆட்டுக்குட்டிகளும் – சிறுகதை




ஒரு காட்டில் ஒரு ஆடும், ஏழு ஆட்டுக்குட்டிகளுடன் வாழ்ந்து வந்தது. தினமும் ஆட்டுக்குட்டிகள் காட்டிற்கு விளையாடச் சென்றனர். ஒரு நாள், ஆட்டுக்குட்டிகளை ஓநாய் ஒன்று கவனித்தது. ஓநாய், ஆட்டுக்குட்டிகளின் வீட்டைக் கண்டறிய ரகசியமாக பின்தொடர்ந்தது.




ஒரு நாள், ஆடு வீட்டை விட்டு வெளியே உணவு தேடி சென்றது. அது தனது குட்டிகளை எச்சரிக்கையாக இருக்குமாறு சொல்லி சென்றது.




www.shortstories4kids.com

ஆடு சென்ற சிறிது நேரத்தில், நரி வீடின் கதவை தட்டி, "குட்டிகளே கதவைத் திறங்கள், அம்மா திரும்பி வந்துவிட்டேன் " என்றது. அப்பாவி ஆட்டுக்குட்டிகள் கதவைத் திறந்தன. உடனே குட்டிகள் ஓநாய் தாக்கியது. ஆறு ஆட்டுக்குட்டிகளை வலுங்கிவிட்டது.




வயிறு நிரம்பிய ஓநாய் வீட்டை விட்டு வெளியேறியது. தாய் திரும்பி வந்த போது கதவு திறந்து கிடப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தது. ஆட்டுக்குட்டிகளை எங்கும் காணவில்லை. ஓநாயிடம் இருந்து தப்பிய ஒரு குட்டி ஆடு தன் தாயிடம் ஓடி வந்து, நடந்ததை எல்லாம் சொன்னது. தாய் ஆடு ஓநாயைத் தேடி வெளியே சென்றது. வீட்டின் அருகே உள்ள மரத்தடியில் ஓநாய் தூங்குவதை பார்த்தது.




தாய் ஆடு மிகவும் அமைதியாக ஓநாய் அருகில் சென்று அதன் வயிற்றைக் கிழித்து தன் குட்டிகளை வெளியே எடுத்து விட்டு, பெரிய கற்களை அதன் வயிற்றில் நிரப்பியது. மீண்டும் அதன் வயிற்றை ஜாக்கிரதையாக ஊசியால் தைத்தது.

www.shortstories4kids.com




ஓநாய் எழுந்தபோது மிகவும் தாகமாக இருந்தது. தண்ணீர் குடிக்க கிணற்றின் அருகே சென்றது. தண்ணீர் குடிக்க குனிந்த போது, வயிற்றில் இருந்த கற்களின் எடை தாங்க முடியாமல் கிணற்றுக்குள் விழுந்து இறந்துவிட்டது.




## கதையின் நீதி

நீங்கள் மற்றவர்களுக்கு கெட்டது செய்தல், உங்களுக்கும் கெட்டது நடக்கும்.

www.shortstories4kids.com